Registered News Paper
Posted at : Chennai Egmore Rms/1Patrika Channel
Posted on :
Publication 21st February 2013

பாட்டாளி சிந்தனை

Post. Reg. No: TN/CCN/429/2012-14
WPP Licence No.: TN/CCN/153/2012-14
Registered with the Registrar of Newspaper in India No : 62018/88













விலை : ₹ 10

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு – வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.suci-c.in

# பாட்டாளி சிந்தனை

## சிறப்பிதழ்

Volume 23 No. 6
February 2013

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா
SUCI
தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ. 10.00





# உங்கள் துயரத்தை பலமாக மாற்றுவீர், வெறுப்பின் கனலை வெல்லற்கரிய போராட்ட உணர்வாக மாற்றுவீர்

எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) அறைகூவல்


























“உயர்ந்த மனித மதிப்புகளை பெற்றிருந்தால், பட்டினிக் கிடக்கும்
ஒரு நாடுகூட எழுந்து நிற்க முடியும். உணவின்றிகூட போராட்டத்தை நடத்த முடியும்...
கொடிய ஒடுக்குமுறை எவ்வளவுதான் இருந்தாலும் தரித்திரம் எவ்வளவுதான்
தலைவிரித்தாடினாலும் ஒரு நாட்டின் மக்கள், ஒரு தேசம் உறுதியாக
எழுந்து நிற்க முடியும். கடும் சித்திரவதைக்கிடையிலும் அது தன் தார்மீக பலத்தை
இழக்காதிருக்குமானால் அது தலைநிமிர்ந்து நிற்கமுடியும். ஆனால் அது
மனித மதிப்புகளை இழக்கின்ற போது அனைத்தையுமே இழந்து விடுகிறது”

***- சிப்தாஸ் கோஷ்***

### தில்லி மாணவி மீதான பாலியல் தாக்குதல்


# உங்கள் துயரத்தை பலமாக மாற்றுவீர், வெறுப்பின் கனலை வெல்லற்கரிய போராட்ட உணர்வாக மாற்றுவீர்

– பிரவாஸ் கோஷ்

டெல்லியில் கும்பலால் பாலியல் கொடுமைக்கு ஆளான அப்பெண் 13 நாட்கள் துணிவுடன் உயிருக்குப் போராடி உயர்நீத்த செய்தி கேட்டு நாட்டு மக்கள் சோகத்தில் மூழ்கினர். நாடு முழுவதுமே துயரத்தால் ஆட்கொள்ளப் பட்டிருக்கின்றது. நாட்டு மக்களைப் பீடித்திருக்கின்ற சோகமும் நெஞ்சை உருக்கும் வேதனையும் எமது கட்சி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) நகரங்களிலும் கிராமங்களிலும் நடத்திய எண்ணற்ற மௌன ஊர்வலங்களில் புலப்பட்டது. பல்வேறு வடிவங்களில் இயக்கங்கள் மேலும் நடைபெறும். பெண்ணை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு எங்கள் இதயப்பூர்வ அனுதாபத்தை சமர்ப்பிக்கிறோம். மேலும், துக்கத்தை அனுஷ்டிக்கும் நாட்டு மக்களுடன் நாமும் இணைகிறோம்.

தான் கொடூரமாகத் தாக்கப்பட்டு பலமுறை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்ட போதும்கூட தைரியமான அப்பெண் நிலை குலையாமல் இறுதிவரை துணிச்சலாகப் போராடினாள் என்பதை நாம் அறிகிறோம். அவமானத்திற்கு அப்பெண்ணை அடிபணிய வைக்க இயலாததால் மிருகத்தனம் கொண்ட கிரிமினல்கள் வேகமாக ஓடும் பேருந்திலிருந்து சாலையில் அவளை வீசினர். இந்த இளம் பெண்ணின் வீரத்தையும் துணிவையும் நாங்கள் வணங்குகிறோம். “நான் வாழ விரும்புகிறேன்” என்று அவள் சுயநினைவை இழக்கும் முன்பு கூறினாள். ஆனால் நாடு, அரசு அவளை வாழ விடவில்லை. குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டுமென மீண்டும் மீண்டும் அவள் கோரினாள். ஆனால் உண்மையான குற்றவாளிகள் பிடிக்கப்பட்டு தண்டிக்கப் படுவார்களா? இதுதான் நமது மனசாட்சி எதிர்கொள்ளும் கேள்வியாகும்.

அதிபயங்கரமான இக்குற்றத்தைப் புரிந்தவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்க வேண்டுமென நாங்கள் கோருகிறோம். அதற்கு கடுமையான சட்டம் இருக்க வேண்டும் என விரும்புகிறோம். அதே சமயம், எவ்வளவுதான் சட்டமும் தண்டனையும் கடுமையாக இருந்தாலும் பாலியல் பலாத்காரமும் கும்பல் பாலியல் பலாத்காரங்களும் தொடர்ந்து அதிகரிக்கின்றன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் இம்மண்ணில் பாலியல் வன்கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன. சிறுமிகளையும் விட்டு வைப்பதில்லை. இதை நாம் நாகரீகம் என்றால் எதனை நாம் காட்டுமிராண்டித்தனம் எனக் கூறுவது?



பிரவாஸ் கோஷ்
பொதுச்செயலாளர்
எஸ்யுசிஐ (சி)

பல ஆயிரக்கணக்கான மகளிர் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவார்கள். அதில் பலர் உயிரிழப்பார்கள், எஞ்சி உயிர்வாழ்பவர்கள் பாதி உயிர் பிரிந்தவர்களாக இருந்து கொண்டிருப்பர். பாலியல் வன்கொடுமை என்ற கொடூரத்திற்கு நிரந்தரத் தீர்வு ஏதேனும் வரும்வரை இக்காட்சியில் மாற்றமிருக்காது.

பாலியல் வன்கொடுமைக்கு பலியான ஆதரவற்ற அப்பெண்ணுக்காக இந்தத் தருணத்தில் நாட்டின் ‘மேல் மட்ட’ தலைவர்கள் முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் முன்பெல்லாம் நடந்ததைப் போலவே இச்சம்பவமும் விரைவில் அமிழ்ந்து, கொதிக்கும் மக்களின் கோபம் அடங்கி மறைந்துவிடும் என அவர்கள் தமது அடிமனதில் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். சில வாரங்களிலேயே கோலாகலமாக ஜனவரி 26 அன்று குடியரசு தினம் கொண்டாடப்படும். ‘கவர்ந்திழுக்கும்’ இத்தலைவர்களின்

'சிறப்பான' வருகையின் முன் உலகத்தின் மிகப்பெரிய ஜனநாயகத்தின் வெற்றியை பீரங்கிகள் காது கிழிய பறைசாற்றிக் கொண்டிருக்கும். நாடு எவ்வளவு வேகமாக 'முன்னேறி வளர்ந்து கொண்டிருக்கிறது' என்பதை பெருமையுடன் அவர்கள் கண்கொள்ளாக் காட்சியாகக் காண்பித்துக் கொண்டிருப்பார்கள். ஜனாதிபதி மாளிகை, அமைச்சக அலுவலகங்கள், செயலக கட்டிடங்கள் எல்லாம் பிரமாண்டமாகச் ஜோடிக்கப்பட்டு ஜொலித்து கொண்டிருக்கும். ஜொலிக்கும் இக்காட்சிகளில் இன்றைய துயரமும் சோக மனநிலையும் அடக்கப்பட்டுவிடக்கூடும். இத்திருவிழாக் கொண்டாட்டத் திரைக்குப்பின்னால் பரவிவரும் இருளாக நாட்டின் ஓலங்களும் துன்பக் குரல்களும் இருந்துகொண்டிருக்கும். நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் தொழிலதிபர்களும் பெரும் வணிகர்களும் முதலமைச்சர்களும் பெரிய அரசியல் கட்சித் தலைவர்களும் பலவகையான பொழுதுபோக்கு நிகழ்ச்சி களிலும் 5 நட்சத்திர விடுதியின் சொகுசு விருந்திலும் மூழ்கி சுதந்திரத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் பொழுது, போக்கிரிகள் என வழக்கமாக அழைக்கப்படும் பட்டினி கிடக்கும் வீதி குழந்தைகள் பல நாட்களாக பசியுடனும் இருப்பிடமின்றியும் சில்லிடும் குளிரைத் தாங்க துணிகளும் இல்லாத – இக்குழந்தைகள் விருந்தின் எச்சிலைகளை அருகமைக் குப்பைத் தொட்டிகளில் தேடிக் கொண்டிருப்பார்கள். வாழ்க்கைச் சூறாவளியில் சிதறித் தொடர்பறுந்துவிட்ட இக்குழந்தைகளுக்குத் தங்கள் பெற்றோர் எங்கே, தாங்கள் தொலைக்கப்பட்டது எவ்வாறு எனத் தெரியாது. வேலை வாய்ப்பற்றோர், அரை மனித நிலையில் வேலை செய்வோர், பணிநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள், புலம்பெயர்ந்த ஏழை விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் என நாட்டில் எண்ணிக்கையில் பல இலட்சக்கணக்கில் பெருகி வருகின்றனர். போதிய மருத்துவ வசதியின்றி பட்டினியில் ஒவ்வொரு ஆண்டும் பல இலட்சக்கணக்கில் இறக்கின்றனர். நாள்தோறும் அணுஅணுவாகச் சாவதை விட ஒரேயடியாக உயிரை விட்டுவிடலாம் என பலர் தற்கொலை செய்து கொள்கின்றனர். பட்டினியால் குழந்தைகளின் அழுகுரலைக் கேட்கப் பொறுக்காமல் இலட்சக்கணக்கானப் பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபட ஆரம்பிக்கின்றனர். பெண்களும் சிறுமிகளும் விற்கப்படும் எண்ணிக்கை அபாயகரமாக அதிகரிக்கின்றது. இக்காட்சிகள் மிகவும் பீதியூட்டக்கூடியதாக ஆழ்ந்த வேதனையளிப்பதாக உள்ளன. மறுபுறத்தில் வெகுசில எண்ணிக்கையில் இருக்கக்கூடிய முதலாளிகளும் பெரும் வணிகர்களும், முன்பு ஆங்கிலேயே ஏகாதிபத்தியவாதிகள் செய்ததைப் போல் நாட்டை கொள்ளையடித்து நாட்டின் செல்வங்கள் முழுமையையும் அபகரித்துக் கொழித்துக் குதூகலிக் கின்றனர்.

குதிராம், பகத்சிங், சந்திரசேகர் ஆசாத், அஸ்ஃபக் குலாஹ், சூரியாசென், ப்ரீத்தி லதா மற்றும் எண்ணற்ற தியாகிகள் தங்கள் இன்னுயிரை ஈந்தது இத்தகைய சுதந்திரத்திற்குத் தானா? நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் நடத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டம் இச்சுதந்திரத் திற்காகத்தானா? மூர்க்கத்தனமாக பெண்கள் பலாத்காரம் செய்யப்படுவார்கள் என்பது போன்ற கொடுமையான நிலைதான் அரசியல் விடுதலை பெற்ற இந்தியாவில் இருக்கும் என தங்கள் கனவின் விளிம்பிலாவது அவர்கள் நினைத்தார்களா? அப்படியெனில் இது யாருடைய சுதந்திரம்? வெட்ட வெளிச்சமாகவே, இச்சுதந்திரம் கேட்பார் பயமின்றி மக்களைச் சுரண்டி ஒடுக்குவதற்கு ஏகபோகவாதிகளுக்கும் பெரும் வியாபாரிகளுக்கும் இருக்கும் சுதந்திரமாகும். தங்கள் இஷ்டம் போல் கொலை – பாலியல் பலாத்காரம் – கொள்ளை நடத்த இவர்களால் உருவாக்கப்பட்டு தீனி போட்டு வளர்க்கப்படும் கிரிமினல்களுக்கும் சமூக விரோதிகளுக்கும் இருக்கும் சுதந்திரமாகும். காங்கிரஸ், பாஜக, சிபிஐ(எம்), திரிணாமூல் காங்கிரஸ், எஸ்பி, பிஎஸ்பி, திமுக, அதிமுக, ஜனதாதளம் (யு), பிஜூ ஜனதாதள் (பிஜேடி) ஆகிய பாராளுமன்றக் கட்சிகள் எல்லாமே இந்த முதலாளித்துவ வர்க்கத்தின் அடிமைகளாகும். முதலாளிகளின் பணபலத்தைக் கொண்ட இக்கட்சிகளில் எது அரசாங்க ஆட்சிக்கட்டிலில் அமரும் வாய்ப்பைப் பெற்றாலும் அது தனது எஜமானனுக்கு உற்சாகமான அரசியல் மேனேஜராக சேவை செய்கின்றது. அதிகார வேட்கை கொண்ட இந்த அரசியல் கட்சிகளுக்குள் நடக்கும் பரஸ்பர சண்டைகள், மோதல்கள், சச்சரவுகள் எல்லாமே அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கம் கொண்டவையேயாகும். எதனை பதவிக்குக் கொண்டு வந்தாலும் தங்களின் சுயநலத்திற்காக மக்கள் பணத்தை சுருட்டவே செய்கின்றன. அனைத்துமே ஊழலில் மூச்சுமுட்டும் வரை மூழ்கியிருக்கின்றனர்.

இக்கட்சிகளின் எதன் ஆட்சியிலும் பாலியல் வன்கொடுமை தினசரி நிகழ்ச்சிகளாகும். இவர்கள் ஒவ்வொருவருமே தங்கள் ஆட்சியில் நடைபெறும் பாலியல் வன்கொடுமை சம்பவத்தை ஒன்று, மறுப்பார்கள் அல்லது ஒன்றுமில்லை என்று மௌனம் சாதிப்பார்கள் அல்லது அதனை ஜோடித்த கற்பனை என்று ஒதுக்குவார்கள் அல்லது தனது ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்த செய்த முயற்சி என்று புறக்கணிப்பார்கள். இன்று இவர்கள் அனைவருமே அடுத்த தேர்தலைக் கருத்தில் கொண்டு இச்சம்பவத்திலிருந்து எவ்வளவு பலன்களைப் பெறமுடியும் என்று கணக்கிட்டு ஊடகங்களின் முன்பு கண்ணீர் வடிக்கின்றார்கள். பெண்களைப் பற்றிய இவர்களின் பார்வை எத்தகைய மரியாதைக் குறைவானது என்பதை கண்ணியத்தின் குறைந்தபட்ச எல்லையையும் மீறும் விதத்தில் பேசிய அவர்களின் சமீபத்திய பேச்சுக்களே சாட்சியாகும். குஜராத்தின் முதல் மந்திரி எதிர்கட்சியை சார்ந்த ஒருவர் '50 கோடி ரூபாய் மதிப்புள்ள பெண் நண்பரை (கேர்ள் பிரண்ட்) வைத்திருக்கிறார் என்று ஒரு கருத்தைத் தெரிவித்தார். டெல்லி மக்களின் பொங்கிவரும்

கோப அலையைக் கண்டு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரான இந்திய ஜனாதிபதியின் மகன் "மாணவர்கள் என்ற பெயரிலே இந்த கண்டன ஊர்வலங்களுக்கு வருபவர்கள் எல்லாம் வண்ணம் பூசிய அழகிகள்" என்று கருத்துத் தெரிவித்தார். கல்கத்தாவின் பார்க் ஸ்டிரீட் பாலியல் வன்கொடுமைக்குப் பலியான பெண்ணை கிட்டத்தட்ட விபச்சாரி என்று அழைக்கும் வகையில் திரிணாமூல் காங்கிரஸின் எம்.பி., 'இது பாலியல் வன்கொடுமை அல்ல, தனக்கும் தன் வாடிக்கையாளருக்கு மிடையே விலை பேசுவதில் ஏற்பட்ட தகராறு' எனக் கூறினார். மேற்கு வங்கத்தின் முன்னாள் அமைச்சரும் தற்போதைய சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான ஒரு சிபிஐ (மார்க்சிஸ்ட்) கட்சித் தலைவர் பொதுக்கூட்ட மேடையிலிருந்து ஆளும் மாநில பெண் முதலமைச்சரை நோக்கி 'நீங்கள் கற்பழிக்கப்பட்டால் அதற்கு நிவாரணமாக எவ்வளவு கட்டணம் கேட்பீர்கள்?' என்ற கேள்வியை வீசினார். இவர்கள் எல்லோருமே தத்தமது கட்சிகளில் தலைவர்களாக இருப்பவர்கள். வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள்தான், ஆனால் ஒரே கலாச்சாரத்தைக் கொண்டவர்கள்.

ஒரு கட்டிடப்பணியில் ஈடுபட்டிருந்த ஏழைத் தொழிலாளர்களிடையே மனிதனின் குணங்கள் கிட்டத்தட்ட மறைந்து வருவதைக் கண்டு ஆழ்ந்த வேதனையுற்று மாபெரும் இலக்கியவாதி சரச்சந்திரர் பல ஆண்டுகளுக்கு முன்பே தனது புகழ்பெற்ற நாவல் 'ஸ்ரீகாந்தா'வில் எழுதினார்: "மனிதனின் மரணத்தைக் கண்டு நான் வேதனையுறவில்லை, ஏனெனில் ஒருவர் பிறந்துவிட்டால் ஒருநாள் இறந்து தானாக வேண்டும். மனித குணங்கள் இறப்பதைக் கண்டு தான் நான் அதிர்ச்சியுறுகிறேன். செல்வத்திற்காக பணக்காரர்களின் பேராசை மனிதர்களை இதயமற்ற விலங்குகளாக மாற்றியிருக்கின்றது. ஏன் இவ்வாறெனில், விலங்கின் நிலைக்கு ஏழைகள் கொண்டு வரப்படாவிட்டால் விலங்குகளைப்போல் அவர்களை வேலை செய்ய அவர்களை நிர்ப்பந்திக்க முடியாது என்பதை பணக்காரர்கள் அறிந்திருக்கிறார்கள்." முதலாளித்துவம் எவ்வாறு சிறந்த மதிப்புகளை, மெல்லிய உணர்வுகளை, காதலை, நேசத்தை மற்றும் தாராள மனப்பான்மையை எல்லாம் அழித்துக் கொண்டிருந்தது என்பதைக் கண்ணுற்றப் பிறகு அவர் அவ்வாறு எழுதினார். ஆனால் அவரும் அவருக்கு முன்தோன்றிய மற்றும் சமகாலத்தவர்களான ராஜாராம் மோகன்ராய், வித்யாசாகர், ஜோதிபா ஃபூலே, விவேகானந்தர், ரவீந்திரநாத் தாகூர், லாலா லஜபதிராய், பாலகங்காதர திலக், கோபபந்து, ஜோதி பிரசாத், சுப்பிரமணிய பாரதி, பிரேம்சந்த், நேதாஜி, நஸ்ரூல் போன்றோர் இன்று நாட்டைச் சூழ்ந்திருக்கும் அகோரத்தையும், பெருகி வரும் பாலியல் பலாத்காரம் மற்றும் கூட்டு பாலியல் பலாத்காரம் போன்றவற்றை பார்க்க உயிர் வாழவில்லை.

அத்தகைய கொடூரங்கள் நடைபெறும் என்பதை அவர்களால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் நிலவிய பழமைவாத குருட்டுத்தனமான ஆணாதிக்க நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில், பால்ய விவாகம் (குழந்தைத் திருமணம்), சதி என்ற பெயரில் இறந்த கணவனின் உடல் தகனத்தில் உடன்கட்டை ஏற்றுதல், பலதார வாழ்க்கை, விதவைகளை இழிவாக நடத்துதல் போன்ற பழங்கால கொடூர சம்பிரதாயங்களும் நடைமுறைகளும் இருந்தன. இவற்றைக் கண்டு கோபங்கொண்ட வித்யாசாகர் ஒருமுறை கூறினார், "எது சரி, தவறு என்ற உணர்வு நீக்கப்பட்ட, நேசமும் அன்பும் இல்லாத, ஆண்களால் இவ்வாறு கொடூரப் படுத்தப்படும் ஒரு நாட்டில் பெண்கள் பிறக்கவே வேண்டாம்." இன்று சமுதாயம் சிக்கியிருக்கும் அவலங்களின் வீச்சைக் குறிக்கும் பலாத்காரம் கூட்டு பாலியல் பலாத்காரம் சம்பவங்களின் எண்ணிக்கை பெருகுவதைக் கண்டிருந்தால் அவரின் எதிர்வினை என்னவாக இருந்திருக்கும்?

மனிதக் குணங்களை ஆளும் பூர்ஷுவா வர்க்கம் தரைமட்டமாக்கி வரும் விதத்தைக் கண்டு, பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும் மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் மிகுந்த கவலையுடன் **36** வருடங்களுக்கு முன்பே கூறினார்: "ஒரு நாட்டின் மக்களோ ஒரு தேசமோ உணவின்றி, அரைப் பட்டினியில் இருந்தாலும் கொடூரமான சித்திரவதைகளைச் சந்தித்தாலும் அப்பொழுதும் கூட அவர்களின் தார்மீக வலிமை குறைந்துவிடாமல் இருந்தால், உறுதியாக எழுந்து நின்று தலைநிமிர்ந்து ஒடுக்குமுறையையும் அநீதியையும் எதிர்த்துப் போராட முடியும்; இதனை ஆட்சியாளர்கள் நன்கறிவர். நீதிநெறி, தார்மீக வலிமையை மக்கள் கொண்டிருக்கும் வரை வெகுஜன எழுச்சியின் பேரலையை எந்த அடக்குமுறை ஆயுத வரிசையும் அடக்க முடியாது என்பதை அவர்கள் அறிவர். எனவேதான் அவர்கள் தேசத்தின் தார்மீக முதுகெலும்பை அழித்தொழிப்பதில் குறியாக இருக்கின்றனர். முன்பிருந்த தலைசிறந்தவர்கள் மற்றும் புரட்சியாளர்களின் பிரகாசமான பாரம்பரியத்தைத் துடைத்தெறிய முனைகின்றனர். சுதந்திரப் போராட்டக் காலத்தில் மற்றும் மறுமலர்ச்சிக் காலத்தில் எட்டப் பட்டிருந்த மிக உயர்ந்த கலாச்சாரத்தரத்திலிருந்து துண்டித்து வேரற்றவர்களாக மக்களை குறிப்பாக மாணவர்களை இளைஞர்களை ஆக்குகின்றனர்.

மாறாக ஆட்சியாளர்கள் இளைஞர்களை தீமைகொண்ட தனிமனிதவாதம், சுயநலம், வக்கிர நுகர்வுக் கலாச்சாரம் என்ற படுகுழியில் தள்ளுவதோடு குடி, சூதாட்டம், ஆபாச ஆட்டங்கள், ஆபாச இலக்கியங்கள், நீலத்திரைப்படங்கள் மற்றும் இதுபோன்ற சாதனங்களின் மூலம் சீரழிந்த கலாச்சாரத்தை பெருமளவு பரப்பி அனைத்து வகை பாலியல் வக்கிர உணர்வுகளிலும் தள்ளுகின்றனர். இவ்வாறு, கலாச்சாரத்தையும் தார்மீக அடிப்படையையும்

*அழிப்பதும் இளைஞர்களின் சிந்தனையை மாசுபடுத்துவதும் முதலாளித்துவ எதிர்ப்புப் புரட்சியின் பயத்தால் பீடிக்கப்பட்ட ஆளும் பூர்ஷுவா வர்க்கத்தின் இன்றைய வர்க்கத் தேவையாக இருக்கின்றது.*

*எனவே சூழ்நிலை இன்று மிகவும் படுமோசமாக மாறிவிட்டது. உண்மையான, மனிதராக இருப்பவர் மட்டுமல்ல, விலங்குகள் கூட பலாத்காரத்தில் கூட்டுப் பலாத்காரத்தில் ஈடுபடுவதில்லை. எனவே, இந்த பாலியல் பலாத்காரத்தை பிரயோகிப்பவர்கள் மனிதனைச் சேர்ந்தவர் களும் அல்ல, விலங்கினத்தைச் சேர்ந்தர்களும் அல்ல. மனிதரல்லாத, மனித உருவில் இருக்கின்ற இக்கயவர்கள் எந்தவொரு தாயின் கருவறையிலிருந்தும் பிறந்து விடவில்லை. அனைத்து குழந்தைகளுமே ஏதும் அறியாதவர்களாக (தூய்மையானவர்களாக) பிறக்கின்றனர். விலங்குகள் தத்தமது உடல் வடிவங்களையும் குணாம்சங் களையும் கொண்டு பிறக்கின்றன. ஆனால் மனிதர்கள் பிறக்கும் போது மனித உடலையும், கூடவே வெற்றுக் காகிதத்தைப் போன்ற மனதுடனும் பிறக்கின்றனர். பின்னர், நிலவும் சமுதாயத்திலிருந்து தங்களின் குணாதிசயங் களையும், நற்குணங்களையும், தீய குணங்களையும், நல்ல மற்றும் தீய ஒழுக்கங்களையும் பெறுகின்றனர்.*

*மக்களின் பிரதான எதிரியான செத்து மடிந்து கொண்டிருக்கும் அழுகிப்போன முதலாளித்துவம் என்ற பிரசவ அறையில் தான் இந்த பாலியல் பலாத்காரம் செய்யும் கயவர்கள் ஜனிக்கின்றனர். இதே முதலாளித்துவம் தான் பெண்ணின் உடலை நுகர்வோர் சந்தையில் ஒரு சரக்காக மாற்றிவிட்டிருக்கின்றது. முதலாளித்துவம் நீடிக்கும் வரை எண்ணிலடங்கா பாலியல் பலாத்காரம் செய்யும் கயவர்களை பிறப்பித்துக் கொண்டே இருக்கும், பாலியல் பலாத்காரங்களும் எண்ணிக்கையில் உயர்ந்து கொண்டு தான் இருக்கும். எனவே அனைத்து நெருக்கடிக்கும் பீடித்திருக்கும் பிரச்சினைகளுக்கும், அதே சமயம் பெண்களின் பாதுகாப்பை நிரந்தரமாக உறுதி செய்யவும் பாலியல் வன்முறை போன்ற குற்றங்களை ஒழிக்கவும் அனைத்துத் தீமைகளுக்கும் ஆணிவேரான முதலாளித்துவ சமுதாயத்தை தூக்கியெறிந்து புதிய சோசலிச சமுதாயத்தை நிறுவுவது மிகவும் அவசியமாகும். இல்லாவிட்டால் இன்று நம் கண்களில் உருளும் கண்ணீரும் ஆழ்ந்த துக்கமும் மதிப்பற்றதாக போய்விடும்.*

*ஆட்சியாளர்களின் கண்ணீர் புகை, ரப்பர் குண்டுகள், தண்ணீர் பீரங்கிகள், குண்டாந்தடிகளை பொருட்படுத் தாமல் கடும் குளிரையும் தாங்கிக் கொண்டு டெல்லியில் இத்தனை நாட்களாக தீரமிக்க இவ்வரலாற்று போரை நடத்திக்கொண்டு இருக்கும் ஆயிரக்கணக்கான துணிவு கொண்ட இளம் மக்களுக்கு குறிப்பாக நூற்றுக்கணக்கான இளம் பெண்களுக்கு எங்களின் புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். இந்தப் போரின் தீப்பிழம்பும் உத்வேகமும் இக்காலத்தின் சரியான புரட்சிக்கர சித்தாந்தத்தால் மேலும் பலம்பெற்று காட்டுத்தீயாக பரவும் என நாங்கள் நம்புகிறோம். இந்தத் தீயில் இருந்து எண்ணற்ற குதிராம் போஸ்கள், பகத்சிங்குகள், ப்ரீத்தி லதாக்கள் பிறப்பார்கள். இக்காலக்கட்டத்தினுடைய மிக உயர்ந்த சித்தாந்தமான, மார்க்சிசம் – லெனினிசம் – தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையால் ஆட்கொள்ளப்பட்டு இவர்கள் நன்கு கட்டமைக்கப்பட்ட முதலாளித்துவ எதிர்ப்பு புரட்சிக்கர இயக்கத்தை வளர்த்து எடுப்பார்கள்.*

*உங்கள் துயரத்தை பலமாக மாற்றுவீர், வெறுப்பின் கனலை வெல்லற்கரியப் போராட்ட உணர்வாக மாற்றுவீர்!*

*புரட்சிகர வாழ்த்துக்களுடன்*



**பிரவாஸ் கோஷ்**
பொதுச் செயலாளர்
எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)
***01.01.2013***

# பாலியல் பலாத்காரம் மற்றும் பாலியல் குற்றங்களின் திகிலூட்டும் அதிகரிப்பு

பாலியல் பலாத்காரம், பாலியல் தாக்குதல்கள், வரதட்சணை சாவுகள், கௌரவக் கொலைகள், மானபங்கப்படுத்துதல், கேலி செய்தல் மற்றும் கடத்தல் போன்றவைகளால் பாதிக்கப்படும் ஆதரவற்ற அப்பாவிகளின் அலறல் விண்ணைக்கிழிக்கிறது.

வக்கிரக்காரர்களின் மிருகவேட்கைக்கு எந்தநேரமும் எந்த இடத்திலும் எந்த வயதுப் பெண்ணும் பலியாகின்றார். கடந்த இருபதாண்டுகளுக்கும் மேலாக வேறெந்த மோசமான குற்றங்களைக் காட்டிலும் பாலியல் பலாத்காரக் குற்றங்கள் மிகவும் அதிகமாக அதிகரித்திருப்பதாக செய்திகள் கூறு கின்றன. இந்தியாவில் நாளொன்றுக்கு 19க்கும் அதிகமான குழந்தை பாலியல் பலாத்காரங்கள் நடைபெறுவதாக செய்திகள் கூறுகின்றன.

ஒரு மணி நேரத்திற்கு சராசரியாக 18 பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்படுகின்றனர். இப்பிணந் தின்னிக் கழுகுகள் தங்களின் காமவெறியுடன் நின்று விடுவதில்லை. தங்களால் பலியானவர்களைக் கொடூரமாக கொல்வதிலும் காட்டுமிராண்டித்தனமான மகிழ்ச்சியை அடைகின்றனர். பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு எரிக்கப்பட்ட அல்லது சிதைக்கப்பட்ட பெண்களின் உடல்கள் சாலை ஓரங்களிலும் குளங்களிலும் அல்லது புதர்களிலும் அவ்வப்போது கண்டுபிடிக்கப்படுகின்றன. பல்வேறு சமயங்களில், அவமானம் தாங்காமல் பலர் தற்கொலை செய்துகொள்கின்றனர். அவர்களில் உயிர் வாழ்பவர்களும் பைத்தியம் பிடித்தோ அல்லது தனிமைப்படுத்தப்பட்ட, வேதனைமிகுந்த சபிக்கப்பட்ட வாழ்க்கையை நடத்திக் கொண்டோ இருக்கிறார்கள். பெண் கருக்கலைப்பு, பெண் சிசுக்கொலை மற்றும் குழந்தை பாலியல் பலாத்காரம் போன்றவைகள் பேய்த்தனமாக அதிகரிக்கின்றன.

## ஒரு சில சம்பவங்கள்

மனித இனங்கள் விலங்குகளைப்போல் வாழ்ந்து வந்த ஆதி சமுதாயத்தில் கூட ஒரு 6 மாத குழந்தை பாலியல் பலாத்காரம் செய்யப்படுவதும், கொல்லப்படுவதும் அல்லது ஒரு வயது குழந்தை மிருகத்தனமாக தாக்கப்பட்டு குப்பையில் வீசியெறியப்படுவதும், 4 வயது தெருச்சிறுமி 21 வயது காமவெறியனால் தாக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் தெருவோரத்தில் வீசியெறியப்படுவதும் அல்லது ஒரு தந்தையே தன் சொந்த மகளை பாலியல் பலாத்காரம் செய்யத் தயங்காததையும் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

ஆனால், அத்தகைய சிற்றின்ப காட்டுமிராண்டித் தனமான, யாரையும் விட்டுவைக்காத ஒரு காட்டை நாகரீக இந்தியாவில் காணமுடியும். ஒரு சிறுவன் தன் மிருக இச்சையைத் தணித்துக்கொள்ள அவனுடைய பாட்டியை போன்ற ஒரு பெண்ணின் மீது பாய்கிறான். பள்ளிச் சிறுமிகள் கடத்தப்படுகிறார்கள். பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு பின் கழுத்து நெறிக்கப்பட்டுக் கொள்ளப்படு கிறார்கள். ஒரு சாலையோரவாசியின் மனைவியும் மகளும் ஒரு குடிகார இளைஞர் கூட்டத்தால் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டு ஒரு காரில் கும்பல் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு சாலையில் தூக்கி வீசியெறியப்பட்டனர். ஒரு வீட்டு வேலைக்கார சிறுமி அவளுடைய நிராதரவான சூழ்நிலையைப் பயன்படுத்தி வக்கிரம் பிடித்த அந்த வீட்டு உரிமையாளரால் தினமும் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டாள். காதுகேட்காத, வாய்பேச முடியாத ஒரு 16 வயது சிறுமி கடத்தப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, அடைக்கப்பட்டு, பாலியல் ரீதியில் கொடுமைப்படுத்தப் பட்டாள். பின்பு, இதை அவள் வெளியில் சொன்னால் அவளுடைய குடும்பஉறுப்பினர் அனைவரும் கொல்லப் படுவர் என அந்த குற்றவாளிகளால் மிரட்டப்பட்டாள். இரண்டு வாலிபர்களால் வலுக்கட்டாயமாக கடத்தப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட ஒரு கர்ப்பிணிப் பெண் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டாள். கும்பல் பாலியல் பலாத்காரத்திற்குப்பின் ஒரு தலித் சிறுமி தன்னைத்தானே தீயிலிட்டுக்கொண்டாள். ஒரு கல்லூரி முதலாமாண்டு மாணவி போதையூட்டப்பட்டு, ஆடை அவிழ்க்கப்பட்டு, படமெடுக்கப்பட்டு, மாணவர் சங்க அறையில் தன் சக மாணவர்களாலேயே கும்பலாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டாள். 21 வயது இளம் பெண் ஒரு கும்பலால் துரத்தப்பட்டு தலைநகரின் பரபரப்பு நிறைந்த ஒரு முக்கிய இடத்தில் அடித்து உதைத்து

துவைக்கப்பட்டாள். பின் எப்படியோ சமாளித்து ஓடிக்கொண்டிருக்கும் பேருந்து ஒன்றில் ஏற முயன்றபோது இழுக்கப்பட்டு பலர் முன்னிலையில் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டாள். உதவி நாடி அலறினாள். அவளை மீட்க ஒருவரும் முன்வரவில்லை. காட்டுக்கூட்டம் ஒன்று ஒரு பள்ளிச்சிறுமியின் ஆடையை களைந்து மாறிமாறி அடித்து பின் மானபங்கம் செய்கிறது. எங்கு என்றால் ஒரு மாநில தலைமைச் செயலகத்திற்கருகில், நகரில் பரபரப்பு மிகுந்த பகுதியில். ஏதோ 'பாஸ்ட் புட்' சாப்பிடுவதுபோல! இவையெல்லாம் எப்படித் தோற்றமளிக்கிறதென்றால் பெண் என்பவள் சதையும் ரத்தமும் கொண்டு ஒரு குறிப்பிட்ட உடற்கூறுவியலில் செய்யப்பட்டு ஒழுக்கங் கெட்டவர்களால் அனுபவிக்கப்படவும் நுகரப்படவுமான ஒரு பொருளே தவிர வேறொன்றுமல்ல என்றெண்ணு மளவிற்குத் தோன்றுகிறது. தன் கண்ணில் படும் எந்தப் பெண்ணையும் ஒருவனுக்கு எடுத்துக்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

பாலியல் பலாத்காரங்கள் ஒருபுறம் இருக்க, பாலியல் தாக்குதல்கள் மற்றும் மனிதத் தன்மையற்ற பெண் கொலைகளின் பிற வகையான எண்ணற்ற சம்பவங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் வரதட்சணை கொலைகள் மற்றும் கௌரவக் கொலைகள் ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் நடைபெற்று வருகின்றன. இவைகளெல்லாம் ஏழைக் குடும்பங்களில் மட்டுமல்ல, நல்ல பாரம்பரியமுள்ள படித்த, வசதிபடைத்த குடும்பங்களிலும் நடக்கின்றன. ஒரு புதிதாக மணமான பெண் தன் கணவன் மற்றும் அவனுடைய குடும்பத்தினரின் அதிகரிக்கும் பணத்தேவையை பூர்த்தி செய்ய முடியாததால் உயிருடன் கொளுத்தப்பட்டாள். வேறொரு ஜாதி அல்லது மதத்தை சேர்ந்த பையனுடன் காதல் கொண்ட மகளை தந்தை சுட்டுக்கொல்கிறார். கலப்புத் திருமணம் புரிந்த தன் தங்கையை அண்ணன் துண்டு துண்டாக வெட்டிக் கொல்கிறான். ஒரு ஆண் குழந்தையை பெற்றுத்தரமுடியாத வீட்டுப்பெண் கணவனால் மற்றும் கணவனின் குடும்பத்தினரால் சித்திரவதை செய்யப்படுகிறாள். ஏன் கொலைகூட செய்யப்படுகிறாள். பெண் சிசுக் கொலை என்பது பல சமூகங்களில் சர்வ சாதாரணமான விஷயம். சாலைகளிலும் பேருந்துகளிலும் தடவுதல், கிள்ளுதல், உரசுதல் போன்றவையெல்லாம் ஒரு நாகரீகமடைந்த நபர் கற்பனை செய்து பார்க்க முடியாத நிகழ்ச்சிகளாகும். அநாகரீகமான பேச்சுகள், இரட்டை அர்த்த நகைச்சுவைகள், உள்நோக்கத்துடன் தொடுதல், தவறான எண்ணத்துடன் பார்த்தல் போன்ற தொந்தரவுகளை பெண்கள் சந்திக்க நேர்கிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்களின் பட்டியலில் மேற்குவங்கமும் ஆந்திராவும் முதலிடத்தைப் பெற்றுள்ளன. மிகவும் பாதுகாப்பில்லாத நகரம் என்ற பெயரைப் பெற்றிருந்த டெல்லி தற்போது பாலியல் பலாத்காரத் தலைநகரம் என்ற பெயரை சம்பாதித்திருக்கிறது. மும்பையும் இப்பெயருக்கருகில் நெருங்கி வருகிறது. தாக்குதல் மற்றும் பெண் கடத்தலின் புகலிடமாக கொல்கத்தா மாறிவிட்டது. மிருக இச்சைக்கு வழி ஏற்படுத்திவிட்ட மானுடம் அற்றுப்போய் மிருகத்தனம் குடிகொண்டுவிட்ட இந்தியச் சமூகம் முழுமையையுமே ஒரு பிணநாற்றமெடுக்கும் நோய் பற்றிக்கொண்டுவிட்டது.

## அதிகரிக்கும் மிருகத்தனம்

இப்படிப்பட்ட பயங்கரக் குற்றங்கள் நடைபெறும் சதுப்பு நிலமாக ஏன் இச்சமூகம் மாறிவிட்டது என்ற கேள்வி மனசாட்சியை விற்றுவிடாத மனிதர்களின் மனதை உலுக்கி எடுப்பது இயற்கையானதே. படித்தவனாகட்டும், படிக்காத வனாகட்டும் வக்கிர எண்ணங்களுக்கு அவனை இன்று அடிமைப்படுத்துவது எது? நுகர்வதற்கான, சுதந்திரமாக கிடைக்கக்கூடிய வெறும் சுகத்திற்கான ஒரு பொருளாக மட்டுமே பெண் ஏன் பார்க்கப்படுகிறாள்? பிணந் தின்னியைப்போல் விருந்து படைப்பதற்காக பெண்பாலின உடலமைப்பை பெற்றவளே பெண் என எண்ணுவது நாகரீகமாகுமா? ஒரு மிருகம் கூட அதன் சக கூட்டாளியை இவ்வளவு கொடூரமாக அரக்கத்தனமாக நடத்துவதில்லை. இத்தகைய ஒழுக்கக்கேடானது வானத்திலிருந்து வந்தது அல்லது வெளியிலிருந்து விதைக்கப் பட்டது என்பதை பகுத்தறிவு கொண்ட எந்த மனமும் ஏற்றுக்கொள்ளாது. ஒரு சமூக அமைப்பில் எந்த விஷயத்திற்கும் அவ்விஷயத் திற்கான அடித்தளமாக உள்ள பொருளாதார அமைப்பி லிருந்து பிரித்தெடுக்கப்பட்டு எந்த ஒரு பிரச்சினையின் மூலக்காரணத்தையும் ஆய்வு செய்ய முடியாது.

நமது நாடு சுதந்திரப் போராட்டத்தின் உக்கிரத்தில் இருந்தபோது இதுபோன்ற முறையற்ற சிந்தனை அல்லது கொடூர செயல்களைப் பார்ப்பது அரிது என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். பெண்கள் மீது நடத்தப்படும் ஒன்றிரண்டு குற்றங்கள் கூட மிகப்பெரிய நெறிபிறழ்தலாக கருதப்பட்டது. சுதந்திரப் போராட்ட உத்வேகத்தின் வீச்சு இருந்த காலம்வரை கூட ஒருசில பத்தாண்டுகளுக்கு அந்த நிலை தொடர்ந்தது. ஆனால், அதன்பின்பு சீரழிவு தொடங்கி மெல்லமெல்ல நெறிபிறழ்தல் என்பதே ஒழுங்குமுறையாக மாறிவிட்டது. அழகிய மனித உணர்வுகள், உணர்ச்சிகள், மென்மையான உணர்ச்சிகள், நீதிநெறிகள், தார்மீக மதிப்புகள் அனைத்தும் திட்டமிடப் பட்ட வகையில் அழிக்கப்படுகின்றன. அனைத்து வகையான குணக்கேடுகளும் சீரழிவுகளும் வன்முறையும் கேவலமான சிந்தனைகளும் ஆரவாரத்துடன் ஊட்டி வளர்க்கப்படு கின்றன. தார்மீக ரீதியினுற்பட்ட திருமணம், பாலுணர்ச்சி, குடும்பம், சமூக உறவுகள், தன்நடத்தை, பிறத்தியாருடனான


அணுகுமுறை ஆகியன சேற்றில் தள்ளி புதைக்கப்பட்டு வருகின்றன. மனசாட்சி உறுத்தலின் ஒரு துளி கூட எங்கும் காணோம்! ஒருவன் தான் விரும்புவனவற்றை எவ்வழியிலும் அடையலாம். தான் விரும்பும் எதையும் செய்யலாம். 'தன்னைப்பற்றி மட்டும் நினை,' 'பிறரைப் பற்றி கனவிலும் நினையாதே' என்பதே இன்றைய தாரகமந்திரம். அனைத்துத் துறைகளிலும் மானுடசாராம்சமே பெருமளவில் தாக்கப்படுகிறது. கேடுகளுக்கும் அநீதிக்கும், தீமைகளுக்கும் அவலங்களுக்கும், ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் எதிரான போராட்டங்களின் உத்வேகத்திலிருந்து பெறப்பட்ட தார்மீக முதுகெலும்பை ஒடிக்க மானுடத்தை அழித்தல், மனிதனையே இயந்திரமாக்குதல் ஆகியவற்றில் முழு கவனமும் இருக்கிறது. மானுடத்தை அழித்தல் எனும் அதிகாரத்திட்டத்தின் விளைவாகத்தான் பெண்கள் மீதான குற்றங்கள் அதிகரிக்கின்றன. இந்தியாவில் மட்டுமல்ல அனைத்து முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளிலும் இது ஒரு பொதுவான அம்சமாகும்.

## முதலாளித்துவ அமைப்பின் சேவகர்கள் அனைவருக்கும் முழு பங்கு உள்ளது

முதலாளித்துவ ஆட்சியின் சேவகர்களும் பாதுகாவலர்களும் பெண்களின் மீது, அவர்களின் கண்ணியத்தின் மீது கொலைத்தாக்குதல்களில் நேரடியாக ஈடுபடுகிறார்கள் அல்லது துணை போகிறார்கள். பெண்கள் மீது அட்டூழியங்கள் அல்லது பாலியல் பலாத்காரக் குற்றங்கள் சுமத்தப்படுவோர் அரசியல் பிரமுகர்களாகவோ அரசியல் பின்புலம் அல்லது இராணுவ அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள், தொழிலதிபர்களின் உறவினர்கள் மற்றும் அதிகாரம் படைத்தவர்களுடன் நெருங்கிய தொடர்பு உடையவர்களாகவோ இருக்கின்றனர். மிகச் சரியாக சொல்வதென்றால், குற்றவாளிகள் பெரும்பாலானவர்கள் ஆளும் கட்சிகளுடன் தொடர்புடையோராகவே இருக்கின்றனர். ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சட்டமியற்றும் சபை (சட்டமன்றம், பாராளுமன்றம்) உறுப்பினர்கள் பெண்கள் மீதான குற்றங்கள் உட்பட கிரிமினல் குற்றங்களின் நீண்ட பட்டியலைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். கும்பல் பாலியல் பலாத்காரம் உட்பட பெண்கள் மீதான கொடூரக் குற்றங்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் தொண்டர்களும் ஈடுபடுவதானது ஒரு பொது அம்சமாக இருக்கிறது. முதலாளித்துவ அல்லது குட்டி முதலாளித்துவ கட்சிகள் மட்டுமல்ல வெறுக்கத்தக்க சமரசவாத சமூக ஜனநாயகவாதத்தை பிரதிபலிக்கும் போலி மார்க்சிஸ்டுகளுக்கும் கூட பெண்கள் மீதான கிரிமினல் தாக்குதல்களில் பங்கு இருக்கிறது. எனவே இக்குற்றவாளிகள் பிடிபடுவதே இல்லை. அல்லது ஒரு பாவனை விசாரணைக்குப்பின் விடுவிக்கப்பட்டு விடுகின்றனர். மிக சமீபத்தில், அதிகாரத்திலுள்ள கட்சிகள் அது காங்கிரஸ், பிஜேபி அல்லது சிபிஐ(எம்) அல்லது வேறு எந்த பிராந்திய கட்சிகளாகட்டும் பாலியல் பலாத்காரம் அல்லது பெண்கள் மீதான கொடூர குற்றங்கள் எதையும் அவர்கள் மறுக்காவிட்டாலும், இது எங்கும் நடப்பதுபோலதான் இங்கும் நடந்திருக்கிறது அல்லது அரசாங்கத்திற்கு கெட்டபெயர் உண்டாக்க இது வேண்டுமென்றே திட்டமிடப்பட்ட ஒன்று என்று எளிதில் முத்திரைக் குத்திவிடுவது வாடிக்கை ஆகிவிட்டது.

சில எடுத்துக்காட்டுகளை இங்கு சுட்டிக் காட்டுவது உதவும். மிக சமீபத்தில் பாலியல் பலாத்காரம், கொலை, கௌரவக் கொலைகள் ஹரியானாவில் உயர்ந்திருக்கிறது. இயற்கையாகவே, இக்குற்றங்களைக் கட்டுப்படுத்த தவறியதாக மாநில காங்கிரஸ் அரசாங்கத்தின் மீது கைகாட்டப்பட்டது. ஆனால் காங்கிரஸ் தலைவர்களின் தற்காப்பு வாதங்களெல்லாம் அசாதாரணமானவை. அவர்களின் வாதம்: "90 சதவீத பாலியல் பலாத்காரக் குற்றங்களெல்லாம் இணக்கத்துடனேயே நடந்தவை. அந்த பெண் அந்த பையனுடன் காதல் கொண்டிருந்தாள். அவன் கிரிமினல் மனப்பாங்கு படைத்தவன் என்பதை அறியாமலேயே அவள் அவனுடன் சென்றாள்... எனவே இப்பாலியல் பலாத்காரத்திற்கெல்லாம் மாநில அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது. சித்தரிக்கப்பட்ட பாலியல் பலாத்காரப் புள்ளிவிவரங்களெல்லாம் மாநில அரசாங்கத்திற்கெதிரான சதி."

1994ம் ஆண்டு கல்கத்தாவிற்கு அருகில் ஒரு சுகாதார ஊழியர் அனிதா திவான் சிபிஐ(எம்)ஆல் ஆதரிக்கப்பட்ட போக்கிரிகளால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட்டதாக கூறப்பட்டபோது அப்போதைய முதலமைச்சர் மறைந்த ஜோதிபாசு அவர்கள், "இவ்வாறெல்லாம் நடப்பதுதான்" என்று அசட்டையான ஒரு பதிலைக் கூறினார். 1990ம் ஆண்டு மூன்று பங்களாதேஷ் அகதிப் பெண்கள் கும்பல் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளானபோது 'அங்கீகாரமற்ற குடிசைவாசிகள்' 'இழிவான தொழில் செய்பவர்கள்', 'காமக்கிழத்திகள்,' 'திருமணமாகாமல் ஆண்களுடன் தேனிலவுவிற்கு சென்றனர்' என்று முத்திரைகுத்தி அப்பெண்கள் மீதான கிரிமினல் தாக்குதலை சிபிஐ(எம்) நியாயப்படுத்தியது. அதைப்போலவே 2006 டிசம்பரில் டாடாவின் நேனோ கார் தொழிற்சாலை நிலத்தில் சிங்கூர் போராட்டத்தில் தீவிரப் பங்காற்றிய தபாசிமாலிக் என்ற இளம் பெண்ணின் எரிக்கப்பட்ட உடல் கண்டெடுக்கப் பட்டது. அப்போதைய ஆளும் கட்சி சிபிஐ(எம்)மின் ஆதரவிலான குற்றவாளிகளால் அப்பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டாள். சிபிஐ(எம்)மின் மாநில செயலாளர் பிமன் போஸ், அந்த பெண் ஒரு ஒழுக்கமில்லாத (loose character) பெண்




அந்தமான் நிகோபார் தீவு




கேரளா




நெய்வேலி



ஆந்திரா




திரிபுரா




ஒரிஸ்ஸா




ஜார்கண்ட்




அஸ்ஸாம்



ஆனந்தபுர்


கல்கத்தா



ஹரியாணா



குஜராத்



டெல்லி



சத்திஸ்கர்



அலகாபாத்


சண்டிகர்

என்றும் இந்த கொலை காதல் தோல்வியால் ஏற்பட்டது என்றும் கூறினார். பின்பு நன்கறிந்த சிபிஐ(எம்) வட்டார தலைவர்கள் இருவர் இக்கொலையில் ஈடுபட்டுள்ளதாகக் கூறி கைது செய்யப்பட்டு 2009ல் ஜாமீனில் விடுவிக்கப் பட்டனர். அவர்களுடைய அரசாங்கத்தின் பெயரை கெடுப்பதற்காகவே இவ்வனைத்து குற்றச்சாட்டுகளும் திட்டமிட்டு ஜோடிக்கப்பட்டவை என பிமன் போஸ் கூறினார்.

மேற்குவங்கத்தில் தற்பொழுது நடைபெற்று வரும் ஒவ்வொரு பாலியல் பலாத்காரம் மற்றும் கொலையையும் ஒதுக்கித்தள்ளி, (மேற்குவங்கத்தில் இதன் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன) இவையெல்லாம் ஜோடிக்கப் பட்டவை, அரசாங்கத்தின் பெயரை கெடுப்பதற்கான சதிச்செயல்கள் என்று திரிணாமூல் காங்கிரஸ் முதல்வர் கூறுவதும் நகைப்புரியதாகும். அதுமட்டுமல்ல இணை ஆணையர் பதவி வகிக்கும் ஒரு பெண் போலீஸ் அதிகாரி கல்கத்தாவின் செல்வாக்குமிக்க பார்க் தெரு பகுதியில் நடந்த இந்த பாலியல் பலாத்கார வழக்கின் புலன் விசாரணையில் தன்னுடைய வழக்கமான கடமையை நிறைவேற்றி, போதுமான ஆதாரங்களுடன் குற்றவாளி களை கண்டுபிடித்தார். இதன் மூலம் அரசாங்கத்தின் இந்த ஜோடிக்கப்பட்டவை என்ற கதையை பொய்யாக்கிய காரணத்திற்காக தண்டிக்கப்படும் விதமாக எந்த முக்கியத் துவமும் இல்லாத ஒரு பதவிக்கு மாற்றம் செய்யப்பட்டார்.

சமாஜ்வாதி கட்சியின் தலைவர் முலாயாம்சிங் சில மாதங்களுக்கு முன்பாக, பாராளுமன்றத்திற்கு தேர்ந் தெடுக்கப்பட்டு வரும் பெண்கள் “தெருக்களில் சீழ்க்கை அடித்து அழைக்கப்படத் தக்கவர்கள்தான்” என்று கருத்துத் தெரிவித்திருந்தார். இக்கருத்து ஆணாதிக்க மனோபாவம் மற்றும் பெண்களைக் கீழ்மைப்படுத்தி அவர்களை இரண்டாம்தர குடிமக்களாகப் பாவிக்கும் அவரின் எண்ணப்போக்கின் விளைவு ஆகும். இம்மாதிரியாக பதவிக்காகவும் அதிகாரத்திற்காகவும் தமக்கிடையே போட்டியிடும் அரசியல் தலைவர்களின் இத்தகைய நடவடிக்கைகள் மற்றும் பேச்சுக்களின் தொடர்ச்சியாக அதிகாரவர்க்கமும் போலீஸ் இராணுவத்துறையும் கூட இந்த விஷயத்தில் செயலற்று இருப்பது இவர்களும் நேரிடையாக ஈடுபட்டும் வருகின்றனர். இவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிப்பதும் கூட நடந்து வருகிறது.

ஒரு பெண்ணை பாலியல் சித்திரவதை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு சத்தீஸ்கர் போலீஸ் அதிகாரி பெண்களிடம் காட்டும் மரியாதைக்காக மெடல் அணிவிக்கப்பட்டு சமீபத்தில் கௌரவிக்கப்பட்டார். தன் சக பெண் அதிகாரிகளிடம் பாலியல் தொந்தரவு செய்யுமள விற்கு மிக அநாகரீகமாக நடந்து கொள்வதாக பல ராணுவ அதிகாரிகள் குற்றம் சுமத்தப்பட்டு வருகிறார்கள். காஷ்மீர், மேற்குவங்கத்தின் எல்லைப்புற மாவட்டங்கள் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் ராணுவ, துணைராணுவ வீரர்கள் மீது அடுக்கடுக்கான பாலியல் பலாத்காரக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன. மணிப்பூரில் ராணுவ வீரர்களால் அதிகரித்துவரும் பாலியல் பலாத்காரங்களை கண்டித்து தங்களுடைய எதிர்ப்பை பதிவு செய்யும் பொருட்டு வயது மூத்த பெண்கள் உட்பட பெண்கள் நிர்வாண ஊர்வலம் நடத்தினார்கள். போலீஸ்காவலில் நடத்தப்படும் பாலியல் பலாத்காரங்கள் குறித்தும் பெரும் எண்ணிக்கையிலான குற்றச்சாட்டுகள் வருகின்றன. ஒருவாரத்திற்கு முன்பு பெங்களூரில் நடந்த ஒரு பாலியல் பலாத்கார வழக்கு விசாரணையின்போது கர்நாடக உயர்நீதிமன்றத்தின் ஒரு டிவிஷன் பெஞ்ச், “ஏன் போலீஸ் எப்பொழுதும் வில்லன்கள் பக்கமே நிற்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளவே முடிவதில்லை. அது ஹரியானாவாகட்டும் அல்லது கர்நாடகாவாகட்டும் எல்லாம் ஒன்றே. பெண்களின் துயரத்தின் மீது எந்த அனுதாபமும் அவர்களுக்கு ஏற்படுவதில்லை. அவர்கள் குடும்பத்தில் இதுபோல் நடந்தாலொழிய அவர்களால் இதை புரிந்துகொள்ள முடியாது” என கூறியது. மன சாட்சியுள்ள சில நீதிபதிகள் இவ்வாறு சொல்லக்கூடிய தைரியத்தைக் காண்பித்தாலும், சித்தரவதைக்கும் கொடுமைக்கும் உள்ளான பெண்ணிற்கு நீதிவழங்கி குற்றவாளிகளை கடுமையாக தண்டிப்பதற்கு பதிலாக குற்றவாளிகளை பெரும்பாலும் நீதித்துறை விடுவித்துவிடுவதோடு அதற்குக் கூறப்படும் காரணங்களும் சந்தேகத்திற்கு இடமளிக்கின்றன. குஜராத்தின் பிஜேபி முதலமைச்சர் நரேந்திரமோடியின் ஆதரவுடன் இந்து வெறியர்களால் நடத்தப்பட்ட குஜராத் இனப்படுகொலையின்போது பெண்கள் மீதான குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் நீதித்துறை நற்சான்று வழங்கியதே மேற்கூறியவைக்கு ஆதாரமாகும்.

மிருக உணர்ச்சிக்காக மட்டும் பெண்கள் குறி வைக்கப்படுவதில்லை. அரசியல்ரீதியில் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள அல்லது பழிவாங்குவதற்கும்கூட பெண்கள் குறிவைக்கப்படுகிறார்கள். குஜராத் இனப்படு கொலையின்போது அதை நாம் கண்டோம். நந்திகிராமில் நியாயமான ஜனநாயக போராட்டத்தை நசுக்குவதற்காக சிபிஐ(எம்) தலைவர்கள் பாலியல் பலாத்காரத்தை ஓர் ஆயுதமாக பயன்படுத்தியதை மேலும் நாம் கண்டோம். “நந்திகிராமில் வசிப்போரின் முதுகெலும்பை நாங்கள் ஒடித்துவிட்டோம்... அவர்களின் ஆயுதம் கொண்டே அவர்கள் கவனிக்கப்பட்டார்கள்... அங்கே எந்த எதிர்ப்பும் இனி இருக்காது” என்று சிபிஐ(எம்) தலைமை கொக்கரித்தது. முதலாளி வர்க்கத்தின் நேரடி அல்லது மறைமுக ஆதரவை பெற்று வளரும் இக்கட்சிகள் பெண்கள்மீது மீடியாக்களில்

காட்டுகின்ற அக்கறையானது தேர்தல் ஆதாயத்தை அறுவடை செய்வதற்குத்தானாகும். இது வேறு எப்படியும் இருக்க முடியாது. ஏனெனில் பூர்ஷ்வா வர்க்கநலன் காக்கப்பட வேண்டுமல்லவா?

## பிரச்சினையை திசைத்திருப்பும் முயற்சிகள்

பிரச்சினையை திசைத்திருப்பும் முயற்சியாக இல்லா விட்டாலும், பெண்கள் மீதான அதிகரிக்கும் குற்றங்களை தணிப்பதற்கு சிலர் கூறும் யோசனைகள் மிகுந்த குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. திருமணம் செய்து கொள்ளும் வயது வரம்பைக் குறைப்பதன் மூலம் இது போன்ற குற்றங்களை கட்டுப்படுத்த முடியும் என மிக வெளிப்படையாகவே வாதிடப்படுகிறது. இதுதான் விஷயமென்றால், பின் திருமணம் ஆன ஒருவர் பாலியல் பலாத்காரம் மற்றும் பெண்கள் மீதான பிற குற்றங்களில் எவ்வாறு ஈடுபடுகிறார்?

சில கட்டுரையாளர்களும் அறிவுஜீவிகள் என தங்களை அழைத்துக்கொள்வோரும் உணர்வுகளைத் தூண்டிவிடும் வகையில் இளம் பெண்கள் ஆடை அணிவதுதான் அவர்களை பாலியல் பலாத்காரம் செய்ய பையன்களை தூண்டுகிறது என சொல்கிறார்கள். அநாகரீகமாக ஆடை அணிவதன் மீதான ஈர்ப்பு ஆதரிக்கப்பட முடியாததாகும். தங்களுடைய கௌரவம் எது என்பதில் விழிப்புணர்வு பெண்களிடம் இருக்கவேண்டும். வெளிப்படுத்துதல், இயல்புக்கு மீறிய பாவனை என்று சொல்லப்படுபவைகளிலெல்லாம் அழகு என்பது இல்லை என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். தன்னடக்கத்துடனும் அழகுணர்வுடனும் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதுதான் பாராட்டுதலை கொணர்கிறது. மேலும் அது எந்த வடிவத்திலும் உணர்ச்சியை தூண்டிவிடுவதாக இருக்காது. அதீத நவீனத்துவம் (ultra modernism) என்பது சீரழிந்த சமுதாயத் தினுடைய ஒரு நோயாகும். அங்கு வெறும் சுகத்திற்கான பொருட்களாக பெண்கள் குறைக்கப்படுகின்றனர். இறுதியில், துணிவற்ற விதத்தில் தந்தைவழிச் சமூக ஆதிக்கத்திற்கு அல்லது ஆணாதிக்கத்திற்கு சரணடையக் கூடிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். ஆனால், மேற்கத்தியஆடை அல்லது குட்டைஆடை அணிவது கற்பழிப்பையும் பாலியல் குற்றங்களையும் நியாயப் படுத்துமா? இவ்வாறு வாதிடுபவர்கள் பாதிக்கப்பட்டவர் மீதே அனைத்துப் பழியையும் போட்டுவிட முயற்சிக் கிறார்கள். ஆனால் நாகரீகமாக உடையணிந்த பெண்களை வக்கிரம்பிடித்த ஆண்கள் மானபங்கம் செய்திருப்பதை பற்பல சம்பவங்கள் காட்டுகின்றன.

பெண்களை, பாலியல் விஷயத்தில் கட்டுப் பாடற்றவர்கள் 'பெண்மைக்குரிய' தன்மைகளை கொண்டிராதவர்கள் அவர்கள் ஆண்களின் கைப்பாவை அல்லது நிரந்தரமாக 'பெண்மைக் குரிய' பலவீனங்களைக் கொண்டவர்கள் என்று முத்திரை குத்துவது பெண்களிடம் தவறாக நடப்பதற்கும் பாலியல்ரீதியில் அவர்களை பயன்படுத்திக் கொள்வதற்கும் ஆண்களுக்கு உரிமம் வழங்கிவிடுமா?

எந்தவொரு காரணமுமில்லாமல் ஒரு மனிதர் மற்றொருவரை ஏன் தாக்க வேண்டும் என்பதே கேட்கப்பட வேண்டிய கேள்வியாகும். பிறருக்கு வேதனை தருவதன் மூலம் ஒருவர் எம்மாதிரியான மகிழ்வைப் பெறமுடியும்? இந்தப் பாலியல் வன்குற்றங்களை குறும்புத்தனமான காதல் விளையாட்டு மற்றும் ஏமாற்றுச்செயல் என்றுசொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது ஏனெனில் இதுபோன்ற பாலியல் குற்றங்கள் முழுவதுமாக ஒரு தலைப்பட்சமாக ஒருவனால் நடத்தப்படுவது. இதில் ஒரு பெண் மற்றொரு வனால் மிகுந்த அபாயத்திற்கு உள்ளாக்கப்படுகிறாள்.

சில மதவெறியர்களும் அடிப்படைவாதிகளும் இந்த வாய்ப்பை நன்கு கைப்பற்றிக் கொண்டு உடை உடுத்துதல், சமூக நடத்தை, செல்போன்களை உபயோகிப்பது, வெளிப்படையாக பையன்களுடன் பழகுவது போன்ற கட்டுப்பாடுகளையும் பெண்கள்மீது கண்டிப்பையும் கட்டுப்பாடுகளையும் விதிக்க வேண்டும் எனக் கோருகிறார்கள். விரும்பக்கூடிய நாகரீகம் அல்லது தன்னடக்கம் அல்லது ஆண்களின் மிருகத்தன்மைக்கு தடைபோடுவது என்ற நோக்கத்திற்காக அல்ல, இதன்மூலம் மதவாத பிற்போக்குத்தனத்தை மனதில் வைத்துக்கொண்டு, பெண்களுக்கு விலங்கிட்டு அடக்கி வைக்கவும், ஆணாதிக்கத்தை நிலைநாட்டவுமே அவர்கள் இவ்வாறு கோருகிறார்கள்.

டீன்ஏஜ் மற்றும் வயது முதிர்ந்த இளைஞர்களிடையே தாறுமாறான பாலியல், பாலியல் வக்கிரம் மற்றும் பாலியல் குற்றங்களைத் தடுக்க பாலியல் கல்வியை பள்ளி மட்டத்திலேயே அமுல்படுத்த வேண்டும் என கோருவது மற்றொரு ஏமாற்றாகும்.

இதுதான் தீர்வு என்றால் பள்ளிகளில் பாலியல் கல்வி அமுல்படுத்தப்பட்டபோதிலும் மேற்கத்திய உலகத்தில் சிறுவர்களிடம் பாலியல் நெறிபிறழ்தல் அதிகரித்து வருவதும் காண்டம்கள் மற்றும் பிற கருத்தடை சாதனங்கள் விநியோகிக்கப் பட வேண்டிய தேவையும் பின் எவ்வாறு ஏற்படுகிறது? தணிப்பதற்கான யோசனைகள் எனும் பெயரில் இதுபோன்ற சாதனங்களெல்லாம் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கவும் குழப்பவுமே உதவும் என்பதைச் சொல்லத்தேவையில்லை. மேலும் பெண்கள் மீது இழைக்கப்படும் குற்றங்களை நியாயப்படுத்தி பிரச்சினையை

திசைதிருப்புவதற்கான தீய நோக்கங்கொண்டதே இத்தகைய பிதற்றல்களாகும். எனவே, இத்தகைய படுமோசமான சீரழிவுக்கும் மனச்சிதைவுக்குமான காரணத்தை நிலவும் சமூக – பொருளாதார சூழலில் சரியான விஞ்ஞான பூர்வமான கண்ணோட்டத்தினடிப்படையில் துருவிபார்த்து கண்டறிய வேண்டும்.

## பெண்ணடிமைத்தனத்தின் வரலாறு

சமுதாய பரிணாம வளர்ச்சியின் வரலாறு அதேசமயம் பெண்ணடிமைத்தனத்தின் வரலாறு பற்றிய விஞ்ஞானபூர்வ அறிவின்படி, புராதன கிளான் (clan) கம்யூனிச சமுதாயத்தில் ஆண்களுக்கு பெண்களை அடிமைப் படுத்துதல் என்பதெல்லாம் கிடையாது. ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் எவ்வித பாகுபாடும் கிடையாது. இருவரும் சமமானவர்கள். எவ்வளவுதான் புராதனமாக இருந்தபோதிலும் அவ்விருவரும் சேர்ந்து உழைத்தனர். உழைப்பின் பயனை சரிசமமாக பங்கிட்டுக் கொண்டனர். அச்சமூகம் தாய்வழிச் சமுதாயமாக இருந்தது. எதுவரை தனிச்சொத்துரிமை இல்லையோ அதுவரை சுரண்டுவோர் சுரண்டப்படுவோர் என்ற பிரிவினை சமூகத்தில் தோன்ற வில்லை. அந்தச் சமுதாயம் வர்க்கங்களாக பிளவுறவில்லை. அங்கு சுரண்டல் இல்லை, சுரண்டப்படுவோரும் இல்லை. எனவே ஒரு பிரிவினர் மற்றவரை அடக்கி ஒடுக்கவில்லை.

சமுதாயம் வர்க்கங்களாக, இருப்பவன் இல்லாதவன் என்ற பிரிவினையின் மீதமைந்த தனிச்சொத்து அப்போதைய சமுதாயத்தில் இனிமேல்தான் தோன்ற வேண்டியதிருந்தது. புராதன வேட்டையாடுபவர் – திரட்டுவர் (hunter-gatherer) என்றிருந்த ஆசை சமுதாயத்தில் விவசாயம் என்ற ஒன்று அறியப்படவில்லை. எனவே அங்கு நிலையான சொத்து என்ற ஒன்று இல்லை. வேட்டையின் மூலமோ அல்லது திரட்டுவதன் மூலமோ எது கிடைத்ததோ அவற்றை இருப்பு வைத்துக்கொள்ள முடியாது. எனவே பிறரிடமிருந்து பறித்து அதை தனக்காக பதுக்கி வைத்துக் கொள்வதென்ற எண்ணமே தோன்ற வில்லை. இயற்கையாகவே சுரண்டல், பிறர் உழைப்பை தனதாக்கிக் கொள்ளுதல் போன்றதெல்லாம் தோன்றவே இல்லை. பாலியல் குறித்த துறையில் ஒருதாரமணம் என்பது இனிமேல்தான் தோன்ற வேண்டியிருந்தது. அச் சமுதாயத்தில் தாயை வைத்துத்தான் குழந்தை அறியப்பட்டது. தந்தையை வைத்து அல்ல. வம்சம் என்பது தாயை வைத்துத்தான் அடையாளங்கொள்ளப்பட்டது. அப்போது பெண்கள் ஆட்சி நடைபெற்றது. இருந்தபோதிலும் பிறரை அடக்க வேண்டும் ஒடுக்க வேண்டும் என்ற சிந்தனை எழுவதற்கான புறவயப்பட்ட சூழ்நிலை இல்லாதவரை ஆண்களின் மீது பெண்களின் மேலாதிக்கம் என்பது இருக்கவில்லை.

விவசாயம் கண்டுபிடிக்கப்பட்டு மெல்லமெல்ல நிலையான சொத்து தோன்றியபோது, சமுதாயத்தின் வளர்ந்துவரும் தேவையை அச்சிறு உற்பத்தி பூர்த்தி செய்யாதபோது பாதுகாப்பின்மை தோன்ற ஆரம்பித்தது. பாதுகாப்பின்மை மனிதனை ஆட்டிவைக்க ஆரம்பித்தது. இதுதான், நிலையான சமூக சொத்தை ஒரு சிலரின் தனிச்சொத்தாக பலாத்காரமாக மாற்றியமைத்துக் கொண்டதைத் தொடர்ந்து வர்க்க பிரிவினைக்கு இட்டுச்சென்றது. வரலாற்றின் அக்கட்டத்தில்தான் பல்வேறு வளர்ச்சிப் போக்குகளுக்கிடையே சுதந்திர தனி மனிதர்களாகியிருந்த பெண்களை அடிமைகளாக்கி, ஆண்களின் தனிச்சொத்தாக்கி அவனுடைய தனிச் சொத்துக்கு சந்ததியினரை பெற்றுத்தந்து வளர்த்திடு பவளாக மாற்றப்பட்டாள். அடிமைகள் மீதும் பெண்களின் மீதும் திணிக்கப்பட்ட ஒரு மரபு வழிப்பட்ட பழக்கமாக கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் சமூக மனநிலை படிப்படியாக தயார் செய்யப்பட்டது.

காலப்போக்கில், இது முடிந்துபோன ஒரு விஷயமாக மாறி ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. சமுதாயப் பழக்கங்கள், சட்டங்கள் மற்றும் பல ஆயிரம் திணிப்புகள் மற்றும் கட்டுத்தளைகள் மூலம் சொத்துடைமை வர்க்கங்களால் அனைத்து அநீதிகளும் நியாயமாக்கப்பட்டன. இவ்வாறு அடிமைத்தனத்தில், வர்க்க பிரிவினை கொண்ட சமுதாயத்தின் முதல் வடிவமானது ஆணை பெண்ணின் உரிமையாளராக, எஜமானராக மாற்றி பெண்ணின் அந்தஸ்து தாழ்த்தப்பட்டுவிட்டது. ஆண்டான் அடிமைச் சமூகத்தைப் போல எஜமானனுக்கு கட்டுப்பட மறுப்பது தார்மீக நெறிக்குப் புறம்பானதாக கருதப்பட்டது; எனவே ஆணை மகிழ்ச்சியடையச் செய்வதற்காகவே பெண் படைக்கப்பட்டிருக்கிறாள். எனவே ஆணுக்கு தார்மீக ரீதியில் அடிபணிந்து இருப்பவளே பெண்.

வரலாற்றின் மாற்றஇயலாத போக்கினைத் தொடர்ந்து ஆண்டான் அடிமைச் சமூகத்திலிருந்து பண்ணையடிமைச் சமூகமாக நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலிருந்து பின்பு முதலாளித்துவமாக சமுதாயம் உயர்த்தப்பட்டது. ஒவ்வொரு கட்டமும் மனித நாகரீகத்தின் ஒரு முன்னேற்றத்தைக் குறிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது ஏதோ தானாகவே நடைபெற்றுவிடவில்லை. அது ஒரு தீர்மானகரமான வரலாற்றுப் போக்கின் மற்றும் ஒடுக்கு வோரை எதிர்த்து ஒடுக்கப்படுவோரின் தீர்மானகரமான போராட்டத்தின் உச்சத்தில்தான் அவ்வாறு நடைபெற்றது. ஆனால் அதன் மூலம் சுரண்டுவோர் மாறினரே அன்றி சுரண்டல் அல்ல.

முதலாளித்துவத்தின் உதயநாட்களில் மட்டுமே முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை அடிப்படையாகக்

கொண்ட நவீன ஜனநாயக சமூகத்தின் பிரதிநிதியான முதலாளித்துவ வர்க்கம் ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம் எனும் கோஷத்தை எழுப்பியது. இதன் மூலம், பழைய கட்டுத்தளைகளைக் கிழித்தெறிந்து, பெண்களும் கூட சமூகத்தில் தங்களுடைய தன்னிகரற்ற அடையாளத்தை நிலைநிறுத்தி ஆண்களுடன் தோளோடு தோள்நின்று உற்பத்தியில் தங்களுடைய பங்கையும் ஆற்றமுடியும். இருந்தாலும் போற்றுதலுக்குரிய பெண்களின் விடுதலை என்பது வந்துவிடவில்லை. இந்த சுரண்டல் அமைப்பின் கொடூர பொருளாதார – அரசியல் – சமூக ஒடுக்குமுறை மட்டுமின்றி நாம் முன்பே காட்டியபடி ஒடுக்கப்படுபவர் ஒடுக்குபவர் என சமூகம் இரண்டு வர்க்கங்களாக பிளவுற்றதன் விளைவாக தந்தைவழிச் சமூகத்தின் மற்றுமொரு ஒடுக்குமுறைக்குத்தான் இன்று பெண்கள் ஆட்பட்டுள்ளார்கள். இயற்கையாகவே மனிதனை மனிதன் சுரண்டுதலையும் தனிச்சொத்துரிமையின் அனைத்து வகைகள் மற்றும் தனிச்சொத்து மனப்பான்மை ஆகிய வற்றையும் ஒழித்தால்தான் பெண் விடுதலை உண்மை யிலேயே சாத்தியமாகும். வரலாற்றின் செயல்முறை போக்கில் எது வந்ததோ அது வரலாற்றின் செயல்முறைப் போக்கில் மட்டுமே போகவேண்டும். ஆனால், முதலாளித் துவத்தில் அது சாத்தியமில்லை. முதலாளித்துவத்தின் உதயத்தின்போது பூர்ஷ்வாவாதிகளும் மறுமலர்ச்சியின் ஆதரவாளர்களும் பெண் சமத்துவத்தை உயர்த்திப் பிடித்த போதிலும், இதை சாதிக்க முடியவில்லை.

முதலாளித்துவமும் கூட ஒரு சுரண்டல் அமைப்பு கையிலடங்கக்கூடிய செல்வந்தர்கள், உடைமையாளர்கள், சுரண்டலாளர்கள் வறுமையுற்று துன்பப்படும் சுரண்டப் படுவோர்கள் என்ற பிரிவினை கொண்ட ஒரு சமுதாயம் உருவாக அதுவே வழிவகுத்தது. எனவே, சமத்துவமின்மை என்பது நிலவுவதோடு மட்டுமின்றி ஒவ்வொரு நாளும் அது விரிந்துகொண்டும் செல்கிறது. மேலும் உற்பத்தி சாதனங்களின் மீதான தனிஉடைமையின் தொடர்ச்சி தனிசொத்து மனப்பான்மையிலிருந்து விடுதலை பெற சமுதாயத்தை அனுமதிக்கவில்லை. இதன் விளைவாக, பூர்ஷ்வா சமுதாயம் தந்தைவழிச் சமூகமாக இருந்ததோடு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பாகுபாடு தொடர்கிறது. எனவே, நெஞ்சிற்போற்றுகின்ற பெண் விடுதலையானது ஒரு கனவாகவே இருக்கிறது.

## நெருக்கடிசூழ்ந்த மரணப்படுக்கையிலுள்ள முதலாளித்துவத்தில் நிலைமை படுமோசமாகியுள்ளது

அதுமட்டுமல்ல. படுமோசம் என்னவெனில் வரலாற்றின் போக்கில் முதலாளித்துவம் நெருக்கடியில் மூழ்கி, சீரழிந்த கட்டத்தை அடைந்து, பிற்போக்காக மாறி, நாகரீகத்தின் முன்னேற்றத்தின் முன் பெரும் தடையாக நின்று, முதலாளித்துவ எதிர்ப்பு புரட்சியைக் கண்டு மரணபயம் கொண்டு தன் மரணவாழ்வை நீடிக்கச் செய்வதற்காக வெறித்தனமாக முயன்று கொண்டிருக்கிறது.

அனைத்துவகையான தரங்கெட்ட சீரழிந்த சிந்தனைகளை ஊக்குவித்து, தான் ஒருகாலத்தில் உயர்த்திப் பிடித்த ஜனநாயகம் மற்றும் ஜனநாயக மதிப்புக்களை காலிலிட்டு மிதித்து, பழைய நிலப்பிரபுத்துவ சிந்தனை களுடன் முதலாளித்துவம் இன்று முற்றிலும் சமரசம் செய்து கொண்டுவிட்டது. உண்மையில், சமுதாயத்தில் மிச்சம் மீதி இருக்கின்ற மனிதக்கூறுகளை துடைத்தெறியவும் போராட்டத்தில் குதிக்கத்தூண்டும் ஒடுக்குமுறைக்கெதிராக கிளர்ந்தெழவும் செய்யும் நீதிநெறி – தார்மீக சக்திகளை அப்புறப்படுத்தவும் காமஇச்சை கொண்ட வெறிபிடித்த மிருகமாக மனிதனை மாற்றும் நன்கு திட்டமிடப்பட்ட சதித்திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. எனவே, 'சாப்பிடு,' 'குடி,' 'சுகமனுபவி' எனும் கோட்பாட்டைப் பரப்பி அல்லது ஆபாச விளம்பரம், சினிமா, தொலைக் காட்சி, செக்ஸ் புத்தகங்களை பரப்பி வக்கிர கலாச்சாரத்தை பரப்பு கிறார்கள். இப்பொழுது இண்டர்நெட், செல்போன் ஆகியவனவெல்லாம் ஆபாச குறுஞ்செய்தி மற்றும் படங்களை பரப்ப நன்கு பயன்படுத்தப்படுகின்றன. பொழுதுபோக்கு அம்சங்கள் முழுவதையும் காமம் என்றாக்கி மிருகஇச்சைக்கு மனிதனை அடிமையாக்கு வதற்கான ஓயாத முயற்சி நடைபெற்று வருகிறது. எனவே, காமவெறியை தணித்துக்கொள்வதற்கான ஒரு சாதனமே பெண் என்ற கருத்தை நிலைநாட்டவும் காடுகளில் தன் இரையின்மீது விலங்குகள் பாய்வதைப்போல எந்த பெண்ணின் மீதும் எந்த இடத்திலும் பாயவுமான ஒரு நிலைக்கு மனதைத் தயார்படுத்துவதற்கான ஆளும் முதலாளிவர்க்கத்தின் சதித்திட்டமே இவையாவும் என்பதை புரிந்துகொள்வது அவ்வளவு கடினம் அல்ல.

மக்களை மிருகமாக்கும் பிற்போக்கு பூர்ஷ்வாக் களுடைய இக்கொடிய திட்டத்தை அம்பலப்படுத்தி எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளரும் இக்கால கட்டத்தின் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களுள் ஒருவருமான **தோழர் சிப்தாஸ் கோஷ் கூறினார்: "ஒரு சித்தாந்தத்தின் உண்மையான சாரம், அதன் மையக்கருவானது அதன் உயர்ந்த கலாச்சார, தார்மீக – நீதிநெறித்தரத்தில்தான் உள்ளது... உயர்ந்த மனித மதிப்புகளை பெற்றிருந்தால் பட்டினிக் கிடக்கும் ஒரு நாடுகூட எழுந்து நிற்க முடியும். உணவின்றிகூட போராட்டத்தை நடத்த முடியும்... கொடிய ஒடுக்குமுறை எவ்வளவுதான் இருந் தாலும் தரித்திரம் எவ்வளவுதான் தலைவிரித்தாடி**

**னாலும் ஒரு நாட்டின் மக்கள், ஒரு தேசம் உறுதியாக எழுந்து நிற்க முடியும். கடும் சித்திரவதைக்கிடையிலும் அது தன் தார்மீக பலத்தை இழக்காதிருக்குமானால் அது தலைநிமிர்ந்து நிற்கமுடியும்."** தற்போதைய செத்துக் கொண்டிருக்கும் முதலாளித்துவ கட்டத்தில் நோயுற்ற மனதின் அபாயகரமான தனிநபர்வாத கிருமியானது, கோரமான தன்மையவாதம், பேராசை, இழிவான நுகர்வுத் தூண்டுதல்கள், 'பெண் என்ற பொருளை துய்த்து மகிழும் வக்கிரஇச்சை' போன்றவற்றை சமுதாயத்தில் தூண்டிவிடுகிறது.

கேடுகெட்ட இந்த முதலாளித்துவ உலகமயக் கொள்கைகள் அமுல்படுத்தப்பட்டபின் மக்களை பலவீனப்படுத்தும் இந்த திட்டத்திற்கு ஒரு புதிய பரிமாணம் கிடைத்துள்ளது. நெருக்கடி சூழ்ந்த முதலாளித்துவத்தில் உற்பத்தியில் தோன்றும் நிலையற்ற தன்மையும் அராஜகமும், வாழ்வைக் கவ்வும் நிச்சயமற்ற தன்மையும் சரியான சித்தாந்த வழிகாட்டுதல் இல்லாத பொட்டல்காட்டில் எந்தவித நீதிநெறிக்குட்படாத வழியையும் மேற்கொள்ள மக்களை தள்ளுகிறது. இதுவும்கூட மிருகத்தை ஒத்த நடத்தைகளுக்குக் காரணமாக அமைந்து விடுகிறது என்பதையும் இங்கு நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம்.

இந்த அம்சத்தை மிகச் சிரத்தையுடன் நாம் கவனிக்க வேண்டும். குணநலன்களின் முன்னேற்றம், வேறுவார்த்தை களில் சொல்வதென்றால் ஒருவர் தழுவும் வாழ்வின் நோக்கத்தைப் பொறுத்தே அவர் மனிதனாக உருவாகிறார். முன்னேற்றத்தின் தத்தமது கால கட்டத்தின் அனைத்து சித்தாந்தங்களும் அனைத்து மாபெரும் மனிதர்களும் சமூக தேவையை நோக்கமாக கொண்டிருந்தனர். அனைத்து தடைகளையும் தனிப்பட்ட அனைத்து வசதியின்மை, அசௌகரியம் அல்லது கடும் துன்பங்களையும் கூட புறந்தள்ளி மனித நாகரீகத்தின் முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்வதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதே வாழ்வின் போற்றுதலுக்குரிய நோக்கம் என போதித்திருக்கிறார்கள். அத்தகைய நோக்கத்தின் உணர்விலிருந்தே சுயகௌரவத்தின் கோட்பாடு அடையப் பெற்றிருக்கிறது. அனைத்து உயர்ந்த சித்தாந்தங்களும் மாபெரும் மனிதர்களும் சுயகௌரவம் மற்றும் வாழ்வின் நோக்கத்தின் கோட்பாடாக இதைத்தான் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்.

நமது விடுதலைப் போராட்டத்தின் போதும்கூட அன்னிய ஏகாதிபத்திய ஆட்சியின் பிடியிலிருந்து தாய்நாட்டை விடுவிக்கும் சமூக தேவையே மேன்மை அடைவதிலும் வாழ்வின் நோக்கத்தை முழுமையடையச் செய்வதிலும் வழிகாட்டும் நோக்கமாக இருந்தது. எனவே, அங்கு சிறந்த குணவான்களும் உன்னத கோட்பாடுகள், உயர்ந்த கலாச்சாரம் மற்றும் மனித சாரத்தை உள்வாங்கி அத்தகைய குணநலன்களை முன்மாதிரியாக கொள்வதற் கான ஆவலும் தோன்றியது.

ஆனால், இன்றைய முதலாளித்துவ சமூகத்தின் அந்திம காலத்தில் இந்த கலாச்சாரம் மற்றும் சித்தாந்தத்தின் அடித்தளம், சுயமரியாதை, சுய கௌரவத்தின் புரிந்துணர்த லானது தாக்குதலுக்குள்ளாகி வருகிறது. எப்படியேனும் பணம் சம்பாதித்தல் எவ்வழிமுறையை கடைபிடித்தும் எவ்வழியிலும் பெறப்படுகின்ற மகிழ்ச்சிக்காக எத்தகைய நடத்தையையும் மேற்கொள்வது என வாழ்வின் நோக்கம் குறுக்கப்பட்டுவிட்டது. விலைஉயர்வு, அதிகரிக்கும் வேலையின்மை மற்றும் நியாயமாக சம்பாதிப்பதற்கான அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டுவிட்ட நிலைமையுடன் வருமானம் படுகுழிக்குள் வீழ்ந்த நிலையில் பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரிக்க அதிகரிக்க எப்படியேனும் பணம் பண்ண வேண்டும் என்ற வெறியும் அதிகரிக்கிறது.

நீதிநெறியற்ற வாழ்வாதாரம் விபரீதச் சிந்தனைகள், சீர்குலைக்கப்பட்ட மன அமைவுகள் மற்றும் சுய–நாட்டம், சுய–சேவை ஆகியனவையே வாழ்முறையாக மாற இதுவும்கூட காரணமாகிறது. போஷாக்கு பெறுவதற்கான சத்து பொருள்கள் வெளியேறி, மனம் வறட்சியடைகிறது. அது உயிரோட்டத்தை இழந்து மலடாகி விடுகிறது. ஒரு மலட்டுமனம் மிக மட்டமான உணர்வுகளை வழிநடத்த அனுமதிக்கிறது மற்றும் மனிதனை விலங்காகவே மாற்றி விடுகிறது. எனவேதான் மனிதனை மனிதன் சுரண்டுவதி லிருந்து விடுபடுவதற்கான, மனித நாகரீகத்தின் விமோசன சாசனமாம் வரலாற்று சிறப்புமிக்க கம்யூனிஸ்ட் அறிக்கையில் கார்ல் மார்க்ஸ் 160 ஆண்டுகளுக்கு முன்பே கூறுகிறார். **"முதலாளித்துவத்தின் வளர்ச்சிப்போக்கில் அதன் தேக்க நிலையை அடைந்து, பணமே சர்வசக்தி படைத்ததும் எங்கும் வியாபித்தும் இருக்கிறது. அவருடைய வார்த்தைகளில், அப்பட்டமான சுயநலத்தைத் தவிர, உணர்ச்சியற்ற 'பணப்பட்டு வாடா'வைத் தவிர எந்த ஒரு பந்தத்தையும் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே பூர்ஷுவாக்கள் விட்டுவைக்கவில்லை... மனித மதிப்பை பண்டமாற்று மதிப்பாக ஆக்கிவிட்டனர். மேலும் பறிக்கமுடியாத எண்ணிலடங்கா வகுக்கப்பட்ட சுதந்திரங்களை 'வியாபார சுதந்திரம்' என்ற நியாயத்திற்குப் புறம்பான, ஒற்றை சுதந்திரத்தால் இடமாற்றம் செய்துள்ளனர்."** (கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை)

அவருடைய தீர்க்கதரிசனம்தான் எத்துனை மேதமைமிக்கது. அனைத்து உறவுகளும் கிழித்தெறியப்பட்டு, வெறும் பண உறவாக குறைக்கப்பட்ட தற்போதைய

மரணப்படுக்கையிலுள்ள முதலாளித்துவ அமைப்பில் அவரின் கூற்று எவ்வளவு உண்மையாயிருக்கிறது. மேலும் சமூக அரங்கில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவு வெறும் பாலுறவு தவிர வேறொன்றுமில்லை என ஆக்கிவிட்டது.

பெண்கள் மீதான பிற குற்றங்கள் ஒருபுறமிருக்க கருவறை முதல் கல்லறை வரை பாலியல் பலாத்காரங் களின் எண்ணிக்கை நான்குகால் பாய்ச்சலில் அதிகரிப்பதற்கும் எந்த நாகரீக சமுதாயத்தையும் மதிப்பிழக்கச் செய்யும் முழு முதலாளித்துவ ஏகாதிபத்திய உலகத்தையும் வெட்ககரமான நிலைக்கு தள்ளுவதற்கும் காரணம் மேற்கூறப்பட்ட இப்பின்னணிதானாகும். எனவேதான் பெண்கள் குறித்த பிரச்சினைகளைக் கையாள் வதில் அரசாங்கங்களும், சிவில் நிர்வாகம், போலீஸ் மற்றும் நீதித்துறையும்கூட அவ்வப்போது இந்த தந்தைவழிச் சமுதாயத்தின் விருப்பு வெறுப்பின்பாற்பட்டும் மனசாட்சியற்றும் செயல்படுவதை நாம் பார்க்கிறோம்.

முதுமையுற்ற இந்த முதலாளித்துவ சமுதாயம் மற்றும் அமைப்பை பாதுகாப்பதில் அல்லது அதற்கு சேவை செய்வதில் ஈடுபடுபவர்கள் இச்சமுதாயத்தாலேயே உருவாக்கப்படும் கேடுகளிலிருந்து பாதிப்படையாமல் விடுபட்டு இருக்க முடியாது. எனவேதான் பாலியல் பலாத்காரம் மற்றும் பெண்கள் மீதான கொடிய குற்றங்களில் ஈடுபடும் பெரும்பாலானவர்கள் ஆதாயம் தேடும் அரசியல் பிரமுகர்களாகவோ கிராமத் தலைவர் களாகவோ அரசியல் ஆதரவு பெற்ற மாஃபியா கும்பல் களாகவோ அல்லது இராணுவ அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகளாகவோ, தொழிலதிபர்கள் மற்றும் அரசுப் பதவிகளில் இருப்பவர்களுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாகவோ இருப்பதை நாம் பார்க்கிறோம்.

## முதலாளித்துவத்தை தூக்கியெறியாமல் பெண்விடுதலை சாத்தியமாகாது

எனவே சீரழிவு, ஒழுக்கக்கேடு, பழி பாவத்திற்கு அஞ்சாமை, ஊழல், நீதிநெறியற்ற வாழ்நிலை, அசுத்த சிந்தனை, பணத்தைத்தேடி ஓடுவது, மிருக இச்சைக்கு அடிமையாதல் இவையே இன்றைய முதலாளித்துவ நாகரீகத்தின் அடையாளமாக ஆகிவிட்டது என்பது தெளிவு. எனவே, அழிவை உண்டாக்குகிற வாழ்விற்கு தீங்கு விளைவிக்கிற இக்கேடுகளை துடைத் தெறிவதென்பது முதலாளித்துவ அமைப்பை தூக்கியெறியும் கேள்வியுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது. பெண்ணின் விடுதலையும்கூட தவிர்க்கவே இயலாது இதோடு சம்பந்தப்பட்டுள்ளது. முதலாளித்துவ எதிர்ப்புப் புரட்சியை கண்டு பீதியுற்ற ஆளும் முதலாளித்துவ வர்க்கமானது அவர்களுடைய சேவகர்களின் உதவியைக் கொண்டு, சமுதாயத்தை பலவீனப்படுத்தியும் நாம் விரும்பும் புரட்சிகர இயக்கத்தை கட்டுவதற்கான திறனற்றவர்களாக மக்களை ஆக்கவும் தார்மீக கலாச்சார முதுகெலும்பை ஒடிக்கிறார்கள். முதலாளித்துவ எதிர்ப்புப் புரட்சியென்பது வெறும் அரசியல் தேவைக்கானது மட்டுமல்ல. அனைத்து வகையான மனக் கட்டுத்தளைகள், அழுகிய சிந்தனைகள், கலாச்சார சீரழிவு, நீதிநெறி மற்றும் தார்மீக சீரழிவிலிருந்தும் விடுதலை பெறுவது மிக அவசியமாகும் என்பதை நன்கு புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஒடுக்குமுறை முதலாளித் துவத்திற்கு எதிராக சரியான புரட்சிகர தலைமையின்கீழ் விழிப்புணர்வுபெற்ற, அணிதிரட்டப்பட்ட மக்கள் இயக்கம் இல்லாததால் தான் முதலாளித்துவ அமைப்பின் கேடுகள், அசிங்கங்கள் மற்றும் நெறிபிறழ்தல்கள், மக்கள் மீதான அநீதிகள், பெண்கள்மீது அடக்குமுறைகள் ஆகியன நான்கு கால் பாய்ச்சலில் அதிகரிக்கின்றன. சீரழிந்த மரணத் தருவாயிலுள்ள வரலாற்று ரீதியாக காலாவதியாகிவிட்ட முதலாளித்துவ அமைப்பின் கோட்பாட்டிற்கெதிரான ஒரு முதலாளித்துவ எதிர்ப்புப் புரட்சிகர போராட்டத்திற்கு பொருந்துகிற வர்க்க மற்றும் வெகுஜன போராட்டங்கள் ஒருமுறை வந்துவிட்டால் விடுதலைக்கான சரியான திசைவழி துன்பப்படும் மனித சமுதாயத்தை கவர்ந் திழுக்கும். உயர்ந்த தார்மீக, கலாச்சாரத்தின் மீதமைந்த புதிய புரட்சிகர சித்தாந்தம் சமுதாயத்தில் தோன்றிவிடும். உயர்ந்த கலாச்சாரத்தின் மீதமைந்த இந்த போராட்ட அலை, மானுடத்தை அழிக்கும் பூர்ஷ்வா சதித்திட்டத்தை முறியடிக்க தேவையான சித்தாந்த வலிமையை வழங்கும்.

இந்த எதிர்நீரோட்ட பேரலையும் உந்தமும், பெண்ணடிமைத்தனம் என்பது பெண்களை பழைமையான காலாவதியான சீரழிந்துபோன சிந்தனைகளிலேயே சிறைவைத்து அவர்களின் உண்மையான மகிழ்ச்சி, வளமை, சாதனைகளைப் பறிந்துவிடும் என ஆண்கள் புரிந்து கொள்ள ஏதுவாக்கும். அதேசமயம், முதலாளித்துவ எதிர்ப்பு புரட்சிகர போராட்டத்திற்கு பொருந்தக்கூடிய சரியான புரட்சிகர சித்தாந்தத்தின் மீதமைந்த விடுதலைக்கான உண்மையான போராட்ட சூழலுக்குள் பெண்கள் கொண்டு வரப்பட வேண்டியதும் அவசியத் தேவையாகும். பெண்களின் இவ்வாறான தீவிரப் பங்களிப்பு இல்லாமல், சரியான புரட்சிகர தலைமையின்கீழ் தீவிர வர்க்க மற்றும் வெகுஜன போராட்டங்களை வளர்த்தெடுக்க முடியாது. அதேபோன்று புரட்சிகர சித்தாந்தத்துடன் பாட்டாளி வர்க்கம் உழைக்கும் மக்களை இந்தப் போராட்டப் போக்கில் உத்வேக மூட்டி ஒரு விஞ்ஞானப்பூர்வ வரலாற்றுரீதியிலான தீர்மானகரமான தர்க்கரீதியிலான இறுதியான முதலாளித்துவ எதிர்ப்பு புரட்சியை செய்து முடிக்க முடியாது.

## தீர்வுக்கான பாதை

எனவே, எந்த மனசாட்சியுள்ள எவரும் கையாலாகாது உட்கார்ந்து கொண்டு பெண்கள் மீதான இப்பேய்த் தாக்குதலையும் சமுதாயத்தைக் காட்டுமிராண்டித்தனம் ஆக்கிரமிப்பதையும் அனுமதிக்காது. யாரோ ஒருவருடைய மகள், சகோதரி அல்லது மனைவி இன்று பாலியல் பலாத்காரம் செய்யப்படலாம் அல்லது சித்திரவதை செய்யப்படலாம். நாளை என்னுடைய சுற்றமும் நட்பையும் சேர்ந்தவருக்கு இந்தநிலை வராது என்பதற்கு என்ன நிச்சயம்? சமுதாயம் முழுமையாக அழுகிப்போய் விட்டால் பாதிக்கப்படுவதிலிருந்து எவரும் தப்பமுடியாது கரைந்து கொண்டிருக்கிறது; சமூகச் சீரழிவை வேரோடழிப்பதற்கான சமயம் வேகமாக கரைந்து கொண்டிருக்கிறது; மானுடத்தின் வாழ்வு காக்கப்பட வேண்டுமானால் பெண்ணினத்தின்மீது ஏவப்படும் இக் காட்டு மிராண்டித்தனத்தை முறியடிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க உறுதியான தீர்மானம் கொள்ள நாடு முழுமைக்குமுள்ள சரியாக சிந்திக்கும் மக்கள் ஒன்றுபட வேண்டும். இந்தத் தேவையை உணர்ந்து சாத்தியமுள்ள அனைத்து வழிகளையும் கைக்கொண்டு, இதை ஒரு வாழ்வா சாவா போராட்டமாகக் கருதி இக்கொடிய குற்றத்தை எதிர்த்து தைரியமுடன் பெண்கள் வெளியே வரவேண்டும்.

பெண்களுடைய மரியாதை, சமஉரிமை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள உயர்ந்த நீதிநெறி, தார்மீகத்தின் மீது நின்று தங்களுடைய அணிகளை நெருக்கி சமூக, கலாச்சார இயக்கத்தின் சக்திவாய்ந்த எதிர் நீரோட்டத்தை கட்ட வேண்டிய தேவை அவர்களுக்கு உள்ளது. ஒவ்வொரு தாக்குதல் மற்றும் சித்திரவதை சம்பவத்திற்கெதிராகவும், அவர்கள் போர்க்கொடி உயர்த்த வேண்டும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற அனைத்து வடிவிலும் கிளர்ச்சியையும் பிரச்சாரத்தையும் மேற்கொள்ள வேண்டும். பருண்மையான கோரிக்கைகளை வென்றெடுக்க ஒவ்வொரு கட்டத்திலும் வெகுஜனங்களை திரட்ட வேண்டும். போராட்டத்தை வழிநடத்த பரந்துபட்ட ஒற்றுமையை வளர்த்தெடுத்து அனைத்து நல்நோக்கங் கொண்ட பெண்கள் அமைப்புகள், பெண்கள் போராட்ட கமிட்டிகள் நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கெங்கும் அமைக்கப்பட வேண்டும். பெண்ணடிமைத் தனத்தின் அனைத்து இழிகுணங்களையும் துடைத்தழித்து ஜடத்துவம், உணர்வற்ற நிலை, போராட்டப்பாதையை தழுவுவதில் தயக்கம் போன்றவற்றை அடித்து நொறுக்கும் நாடுதழுவிய எழுச்சிப் பிரவாகமாக பெண்கள் தங்கள் சக்தியை வெளிப்படுத்த வேண்டும். போராட்டத்தின் நிர்ப்பந்தம் அரசாங்கம் – நிர்வாகத்தை இறுக்க வேண்டும். பெண்களுக் கெதிரான குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை அளிக்க அவர்களை நிர்ப்பந்திக்க வேண்டும். பெண்களின் எழுச்சி எனும் வடிவத்தில் இவ்வகை போராட்டத்தின் தீவிரமானது வடிவமைக்கப்பட்ட முறையில் செயல்படுவதை நிறுத்த நிர்வாகத்தின் மீதும் நீதித்துறையின் மீதும் நிர்ப்பந்தத்தை அளிக்க வேண்டும். இவற்றினிடையே எவ்வித கிரிமினல் தாக்குதலிலிருந்தும் தங்களைக் காத்துக்கொள்ளும் வகையில் தேவையான உடற்பயிற்சியும் அளிக்கப்பட தீர்மானகரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்விஷயத்தில் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க அரசாங்கம் வலியுறுத்தப்பட வேண்டும்.

இறுதியில் நாட்டின் நல்லெண்ணம் கொண்ட ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் உறுதியான ஒற்றுமையை மையமாகக் கொண்டு இந்த போராட்டம் நிற்க வேண்டும். சரியாக சிந்திக்கும் ஆண்கள் அனைவரும் வரலாற்று பூர்வமான இப்போராட்டத்தில் இணைந்து, பின்புலமாக செயல்படுவது வரலாற்றுரீதியான அவசிய தேவையாகும். பெண்கள் மீது அதிகரித்துவரும் கொடுமை களுக்கு எதிராக ஒரு செயற்திறன் மிக்க தடுப்பை இவ்வழியில் மட்டுமே உருவாக்க முடியும். **மாபெரும் மேதை மார்க்ஸ் தன் புனித குடும்பம் எனும் நூலில் எழுதினார்: "வரலாற்றில் மாற்றம் என்பது எப்போதும் சுதந்திரத்தை நோக்கிய பெண்ணின் விடுதலை யால்தான் தீர்மானிக்கப்படுகிறது. ஏனெனில் பெண்ணுக்கும் ஆணுக்குமிடையிலான பலவீனத்திற்கும் பலத்திற்குமிடையிலான உறவில் மனித இனத்தின் வெற்றி கொடூரத்தின் மீதான வெற்றியாக கருதப் படுகிறது. பெண் விடுதலையின் அளவே பொது விடுதலையின் இயற்கையான அளவாகும். பெண்ணினத்திற்கெதிரான குற்றமானது மனித இனத்தின் மீது ஒரு சாபமாகும். ஆகையால் இக்கேட்டை மனித இனம் உரிய வேகத்தில் நீக்க வேண்டும்."**

★ ★ ★